DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No. 20/2023 |
| Deposition of witness | : | PW-2 |
| Name | : | ராம்குமார் |
| Father's /Husband Name | : | சுந்தரேசன் |
| Village | : | மாந்தை கருப்பூர் |
| Taluk | : | குத்தாலம் |
| Age | : | 51 |
| Occupation | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 08th day May 2025.
Accused present.

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்:-**

நான் என்ன காரணத்திற்காக சம்பவ தினத்தன்று சம்பவ இடமருகே சென்றேன் என்று போலிசார் விசாரணையில் கூறினேனா என்றால் போலிசார் அதை கேட்காததால் கூறவில்லை. முதல் விசாரணையில் சம்பவம் மாலை 6 மணியளவில் நடந்ததாக கூறினேனா என்றால் சரிதான். சம்பவ இடமருகே ஒரு காவல் சோதனை சாவடி உள்ளதென்றாலும் அதனருகே ஒரு வேக தடை உள்ளதென்றாலும் சரிதான். அ.சா.1 அன்சாரி பேருந்தின் படியில் பயணம் செய்தார் என்றால் பயணம் செய்தபோது எங்கிருந்தார் என்று நான் பார்க்கவில்லை. அ.சா. 1 வேகத்தடையில் பேருந்து ஏறி இறங்கியபோது தான் கீழே விழுந்து காயமடைந்தார் என்றால் சரியல்ல. பயணச்சீட்டை நான் போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் போலிசார் கேட்காததால் கொடுக்கவில்லை. நான் பேருந்தில் பயணிக்கவில்லை என்பதால் தான் பயணச்சீட்டை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா. 1 க்கும் எதிரிக்கும் பண நிலுவை இருந்தது என்றால் அவ்வாறு தான் கூறிகொண்டார்கள். போலிசார் என்னை சம்பவ இடத்திலும் பிறகு காவல் நிலையத்திலும் விசாரித்தார்கள். நான் முதல்விசாரணையில் சொல்லியது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும், அ.சா. 1க்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும், எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.05.08 03:40:33 +0530